விலை ரூபா: 10.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: நான்கு

சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2037 புரட்டாதி 01 ஞாயிற்றுக்கிழமை (17.09.2006) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 263

ராம்கோ RAMCO

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.

ராம்கோ சீமெந்து

# சமாதான முயற்சிகளை வலுப்படுத்த ஐ.நா.சபை ஒத்துழைப்பு வழங்கும்

## கொபி அனான் தெரிவிப்பு

(ஹவானா)

இலங்கையின் சமாதான முயற்சிகளை வலுப் படுத்தத் தேவையான ஒத்துழைப்புகளை தான் வழங்குவதாக ஐக்கிய நாடுகள் சபையின் செய லாளர் கொபி அனான் குறிப்பிட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சந்தித்தபோதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

(04 ஆம் பக்கம் பார்க்க)



# கடல் வழிப் போக்குவரத்துக்களை நிறுத்துமாறு புலிகள் வேண்டுகோள்

(கிளிநொச்சி)

யாழ்ப்பாணத்திலிருந்து தென்பகுதிக் கான கடல்போக்குவரத்தை மேற்கொள்ள வேண்டாமென விடுதலைப்புலிகளின் அர சியல்துறை அறிவித்துள்ளது. இது தொடர் பாக அரசியல்துறை ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள அறிக்கை வருமாறு.

கடற்படைகள் யாழ்ப்பாண மக்களை கேடயமாகப் பயன்படுத்தி தங்களுடைய கடல் வழிப்போக்குவரத்து மற்றும் அதனூடான வளங்களை செய்து வருகின்றது.

எவ்வகையிலும் பாதுகாப்பு உறுதிப்பாடு வழங்கப்படாததாகவே கடல்வழிப்போக்கு வரத்துள்ளது. தரை வழிப்பாதையைத் திறந்து மக்களுடைய போக்குவரத்திற்கு வழிசெய் யப்படவேண்டுமென்று விடுதலைப்புலிகள் வலியுறுத்தி வருகின்றனர்.

தரைவழிப்பாதையைத் திறப்பதற்கு தாம் தயாராக இருப்பதாக சர்வதேச சமூகத்திற்கும் இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவருக்கும் (04 ஆம் பக்கம் பார்க்க)

## கடத்தப்பட்ட இளைஞர் விடுதலையானார்!

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாயில் வெள்ளைவானில் வந் தோரால் கடத்தப்பட்ட இளைஞன் விடுவிக் கப்பட்டார்.

கடந்த திங்கட்கிழமை 6.30 மணிக்கு 5 ஆம் கால் மதவடி சண்டிலிப்பாயில் உள்ள வீட்டிலிருந்து கடத்தப்பட்ட செல்லையா ஞான சேகரம் என்பவரை வியாழன் அதிகாலை மீண்டும் வீட்டில் கொண்டுவந்து விட்டுச் சென்ற தாக உறவினர்கள் யாழ்.மனித உரிமை ஆணைக்குழுவிடம் தெரிவித்துள்ளனர். (ச)

# திலீபனின் நினைவு நிகழ்வில் தலைவர் பிரபாகரன் பங்கேற்பு



(கிளிநொச்சி)

தியாக தீபம் லெப்.கேணல் திலீபனின் 19 ஆம் ஆண்டு தொடக்க நினைவு நாளில் தமிழீழ தேசியத்தலைவர் வே.பிரபாகரன் பங்கேற்றுள்ளார். திலீபன் நிகழ்வுக்கென பிரத்தியேகமாக ஏற்பாடு செய்யப்பட்ட மண்டபத்தில் திலீபனின் திருவுருவப்படத்திற்கு ஈகச்சுடரேற்றி மலர் மாலை அணிவித்து அவர் வணக்கம் செலுத்தினார். இந் நிகழ்வில் தளபதிகள் ,பொறுப்பாளர் கள் மற்றும் போராளிகள் கலந்து கொண்டு திலீபனுக்கு வணக்கம் செலுத்தினர். (ச-5)

# மன்மோகன் சிங்-முஷாரப் கியூபாவில் சந்தித்துப் பேச்சு

(கியூபா)

கியூபாவில் நடக்கும் அணிசேரா நாடுகளின் உச்சி மாநாட்டில் பங்கு கொள்வதற்காக ஹவானா சென்றுள்ள இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கும், பாகிஸ்தான் அதிபர் ஜென ரல் முஷாரப்பும் சந்தித்துப் பேசியுள்ளனர்.

இந்தியாவுடனான தனது பிரச்சினைகளை சுமுகமான முறையில் தீர்க்க தான் உறுதி பூண்டுள்ளதாகக் கூறும் பாகிஸ்தான், அதே நேரம் காஷ்மீர் பிரச்சினையில் முன்னேற் றம் ஏற்பட்டால்தான் இரு தரப்பு உறவுகள் சீரடையும் என்று கூறுகிறது.

ஒரு பயனுள்ள விவாதத்தினை எதிர்பார்ப்பதாக இந்திய பிரதமர் மன்மோகன் சிங் மற் றும் பாகிஸ்தான் அதிபர் பர்வேஷ் முஷாரப் தெரிவித்திருந்தனர்.

அணி சேரா நாடுகளின் மாநாட்டில் உரையாற்றிய இந்திய (04 ஆம் பக்கம் பார்க்க)

# மனித உரிமை மீறல்கள் உடன் நிறுத்த வேண்டும்

## மனிதஉரிமைகள் அமையம் வேண்டுகோள்

(சென்னை)

தமிழர்களுக்கு எதிராக நடைபெற்று வரும் மனித உரிமை மீறல்களை நிறுத்த உடன் நடவடிக்கை எடுக்குமாறு அனைத்துலக பாரபட்சங்களுக்கும் இனவாதத்திற்கும் எதிரான சர்வதேச அமைப்பு மனித உரிமைகள் விவகார அமைச்சர் மஹிந்த சமரசிங்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

மனித உரிமைகளை மிக மோசமாக மீறி வரும் நாடாக இலங்கை மாறியுள்ளதாகவும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

இந்த அமைப்பின் ஒருங்கிணைப்பாளரான நிமல்கா (04 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணாமல் போதல் குறித்து ஆணைக்குழு அமைப்பு

(கொழும்பு)

கொழும்பிலும் நாட்டின் ஏனைய பகுதிகளிலும் அதிகரித்து வரும் கடத்தல், காணாமல் போதல் போன்ற சம்பவங்களை விசாரிக்க ஓய்வு பெற்ற மேல் நீதிமன்ற நீதியரசர் மஹாநாம திலகரட்ணவை கொண்டு தனிநபர் ஆணைக்குழு ஒன்றை இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நியமித்திருப்பதாக ஜனாதிபதி செயலகம் நேற்று அறிவித்துள்ளது.

அதிகரித்து வரும் கடத்தல், காணாமல் போதல் போன்ற சம்பவங்கள் தொடர்பாக இலங்கைப் பிரஜைகள் சிலர் ஜனாதிபதியிடம் மேற்கொண்ட முறைப்பாடு, மனித உரிமைகள் அமைப்புக்கள், ஊடகங்களில் வெளியாகும் அறிக்கைகள் மற்றும் செய்திகளின் பின்னரே ஜனாதிபதி ராஜபக்ஷ இவ்வாறான தனிநபர் ஆணைக்குழு ஒன்றினை அமைத்திருப்பதாகவும் பொதுமக்கள் தமது முறைப்பாடுகளை இந்த ஆணைக்குழுவிடம் தெரிவிக்லாம் என்றும் ஜனாதிபதி செயலகம் வெளியிட்டஅறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

# எயிட்சைக் கட்டுப்படுத்த புதிய மருந்து கண்டுபிடிப்பு

எயிட்ஸைக் கட்டுப்படுத்தும் புதிய மருந்தை ஈரான் விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளதாக அந் நாட்டின் மருத்துவக் கல்வி மற்றும் நலவாழ்வு அமைச்சர் கூறியுள்ளார்.

உலக சுகாதார அமைப்பின் கிழக்கு மத்தியத் தரைக் கடற்பகுதிக்காக 53-வது மாநாட்டில் கலந்து கொள்ள இஸ்பகான் சென்றுள்ள அவர் இத்தகவலை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது,

எயிட்ஸ் நோயாளிகள் சிலருக்கு இப் புதிய மருந்தை மூன்று மாதங்கள் கொடுத்து விஞ்ஞானிகள் பரிசோதித்தனர். அதில் அந்த நோயாளர்கள் 2 ஆண்டுகள் வரை நோயின் பிடியிலிருந்து முற்றிலுமாக விடுபட்டதைக் கண்டறிந்தனர்.

இந்த மருந்தினால் எயிட்ஸ் பூரணமாகக் குணமடையும் என்று தற்சமயம் எங்களால் கூற முடியாது. எனினும் இப்புதிய மருந்தை மூன்று மாதங்கள் உட்கொண்டால் இரண்டு ஆண்டுகளுக்குக் கண்டிப்பாக நோயிலிருந்து தப்பலாம் என்று விஞ்ஞானிகள் உறுதியளித்துள்ளனர் என்றார் அவர். (ச-5)

# அக்சன் பாம் பணியாளர்களின் உடல்கள் தோண்டி எடுப்பு

(திருகோணமலை)

மூதூர் அக்சன் பாம்நிறுவனப்பணியா ளர்கள் இருவரின் உடல்கள் நேற்றுத் தோண்டி எடுக்கப்பட்டுள்ளன. மூதூர் மற்றும் திருகோண மலை மேலதிக நீதிவான் வசந்த தினசேன வின் முன்னிலையில் இந்த உடல்கள் திருகோணமலை உப்புவெளி இந்து மயானத் தில் இருந்து தோண்டி எடுக்கப்பட்டன.



இரகசியப் பொலிஸாரின் கோரலின் பேரில் இரசாயனப் பகுப்பாய்வுக்காக இந்த உடல்கள் தோண்டி எடுக்கப்பட்டன. தோண்டியெடுக்கப்பட்ட மாதவராஜா கேதீஸ்வரன், முத்துலிங்கம் நர்மதன் ஆகியோரின் உடல்கள் கொழும்பு இரசாயன பகுப் பாய்வுக்காக அனுப்பப்படவுள்ளன.

இதேவேளை ஏனைய 15 பேர்களின் உடல்கள் தொடர்பிலும் இரசாயனப் பகுப்பாய்வு மேற்கொள்ளப்படுவதற்கு மூதூர் மற்றும் திருகோணமலை மேலதிக நீதிவான் அனு மதி வழங்கியுள்ளார்.

கடந்த மாதம் மூதூரில் ஏற்பட்ட மோதல்களின் போது 17 பணியாளர்கள் கொலை செய்யப்பட்டனர். எனினும் இவர்களின் உடல்கள் மூன்று நாட்களின் பின்னரே மீட்கப்பட் டன. இந்நிலையில் இவர்களின் கொலைச் சம்பவமானது சர்வதேச கவனத்திற்குட்பட்ட விடயமாக மாறியதையடுத்து விசாரணைக்காக அவுஸ்திரேலிய நிபுணர்களின் உதவியும் பெறப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ச)

# டீசல் இன்மையால் பஸ் சேவை பாதிப்பு

யாழ்.மாவட்டத்தில் அத்தியாவசிய சேவைகள் முற்றாகச் செயலிழக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

எரிபொருள் தட்டுப்பாடே இந்நிலைக்குக் காரணம் என சம்பந்தப்பட்டவர்கள் தெரிவித்துள்ளனர். போக்குவரத்துச் சபையின் சேவைகள் நேற்று முதல் நிறுத்தப்பட்டன. போதியளவு டீசல் இல்லாத நிலையில் தனியார் நிரப்பு நிலையங்களில் டீசல் பெற்றுச் செயற்பட்டதாகவும் அதுவும் தீர்ந்துள்ள நிலையில் சேவையை மேற்கொள்ள முடியாதநிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது இவ்வாறிருக்க மின்சாரம் முற்றாகத் தடைப்பட்டுள்ளதால் அரச நிறுவனங்கள், வைத்தியசாலைகள் என்பன இயங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

மாற்று ஏற்பாடாக ஜெனரேற்றர் மூலம் மின்சாரத்தைப் பெறுவதற்கும் எரிபொருள் தட்டுப்பாடாகவிருப்பதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஓரிரு தினங்களில் இவற்றை நிவர்த்தி செய்யாவிட்டால் யாழ்.குடாநாடு முற்றாக செயலிழக்கும் அபாயம் ஏற்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ச-5)

## 250 தபால் பொதிகள் யாழ்.வருகின்றன!

(யாழ்ப்பாணம்)

திருகோணமலையிலிருந்து 250 தபால் பொதிகள் யாழ்ப்பாணத்திற்கு எடுத்துவரப்படவுள்ளன. இன்று அங்கிருந்து புறப்படும் என எதிர்பார்க்கப்படும் கப்பலிலேயே அப் பொதிகள் கொண்டு வரப்படவுள்ளன.

'தென்னிலங்கையில் சேர்க்கப்பட்ட இப் பொதிகள் யாழ்.வந்ததும் அவற்றை உடனடியாக விநியோகிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தபால் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. (ச-133)

## சிற்றுண்டிச்சாலைகளுக்கு பொருள் வழங்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபைக்குட்பட்ட சிற்றுண்டிச் சாலைகளுக்கு தேவையான பொருட்களை யாழ்.பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதாக யாழ்.வணிகர் கழக வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ்.நகர சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் தமக்குத் தேவையான பொருட்களின் விபரங்களை யாழ்.வணிகர் கழகத்தில் பதிவு செய்திருந்தனர்.

அதற்கமைய அரச அதிபருடன் தொடர்பு கொண்டு தேவையான பொருட்களைப் பெற நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ச-133)

# இளைஞர்களின் சடலங்களை அடையாளம் காட்ட அழைப்பு

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் மூன்று கோயிலடியில் மீட்கப்பட்ட இரு இளைஞர்களின் சடலங்கள் அடையாளம் காண்பதற்காக யாழ்.போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

குறித்த இளைஞர்களின் படுகொலை தொடர்பாக நீதி விசாரணைகளை நடத்திய யாழ்.மாவட்ட நீதிவான் இ.த.விக்னராஜா சடலங்கள் அடையாளம் காணப்படாமையால் அவற்றை யாழ்.போதனா வைத்தியசாலை பிரேத அறையில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

இதேவேளை குறித்த இளைஞர்களின் சடலங்களை அடையாளம் காண்பித்துப் பெற்றுக் கொள்ளுமாறு யாழ்.போதனா வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ச-5)

# வரணியில் மூன்று சடலங்கள் மீட்கப்பட்டு புதைக்கப்பட்டன

வரணி இடைக்குறிச்சியில் கடந்தமாதம் உயிரிழந்த மூவரினது சடலங்கள் தொடர்பான விசாரணைகள் நேற்று நடைபெற்றன.

கடந்த மாதம் இடம்பெற்ற தாக்குதல்களின் போது வீடு ஒன்றின் மீது விழுந்த ஷெல் வெடித்ததில் மூவர் உயிரிழந்தனர். அவர்களின் சடலங்கள் அவ்விடத்திலேயே புதைக்கப்பட்டன.,

நேற்று சம்பவ இடத்திற்குச் சென்ற சாவகச்சேரி நீதிவான் பிறேம்சங்கர் சடலங்கள் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டார்.

பின்னர் சடலங்கள் உரிய முறையில் அடக்கம் செய்யப்பட்டன. சிதம்பரநாதன் காராளசிங்கம் (வயது-54), அவரது மனைவி தவலோகநாயகி (வயது-51) மற்றும் பாலசுந்தரம் ஞானசேகரன் (வயது-20) ஆகியோரின் சடலங்களே நேற்றுப் புதைக்கப்பட்டன. (ச-5)

# சாத்வீகப் போராட்டத்தில் ஈடுபட சகல வர்த்தகர்களுக்கும் அழைப்பு

சாத்வீக எதிர்ப்பைப் பலவீனப்படுத்த சில தமிழ் அரசியல்வாதிகள் முயற்சிக்கின்றனர் என்று மேலக மக்கள் முன்னணியின் தலைவரும் எம்.பியுமான மனோ கணேசன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளரால் நடத்தப்பட்ட மாநாடு தலைநகரில் தமிழ் மக்கள் கடத்தப்படுவதற்குத் தீர்வல்ல. இம் மாநாட்டில் தமிழ் மக்களின் பிரச்சினைகள் பற்றி கலந்துரையாடப்பட்டது.

ஆனால் இந்த மாநாட்டைப் பயன்படுத்தி பாதிப்புக்குள்ளாயிருக்கும் தலைநகர தமிழ் மக்கள் மற்றும் வர்த்தகர்கள் சார்பில் எமது கட்சி உட்பட பல்வேறு தமிழ், முஸ்லிம், சிங்கள கட்சிகள் முன்னெடுக்கும் சாத்வீகப் போராட்டத்தைப் பலவீனப்படுத்த சில மலையக தமிழ் அரசியல்வாதிகள் முனைந்து நிற்பது வேதனைக்குரியது.

உதவி செய்யாவிட்டாலும் உபத்திரவம் செய்ய நினைக்கும் இத்தகைய நபர்களை தலைநகர தமிழ் மக்களும் வர்த்தகர்களும் அடையாளம் கண்டு கொள்ள வேண்டும்.

இன்று தலைநகரில் தமிழ் மக்கள் பாரிய மனித உரிமை மீறல்களுக்கு உள்ளாகியுள்ளார்கள். ஆட்கடத்தல்கள் தொடர் கதையாக மாறிவிட்டன. தமிழ் வர்த்தகர்கள் தொடர்ந்து தலைநகரில் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுவதா? அல்லது வர்த்தக நிலையங்களை இழுத்து மூடுவதா? என்று சிந்திக்கும் நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளார்கள்.

இன்று தமிழ் வர்த்தகர்களுக்கு நடப்பது நாளை முஸ்லிம் வர்த்தகர்களுக்கு நடந்து விடும் என்ற அச்சம் முஸ்லிம் வர்த்தக சமூகத்திலும் எழுந்துள்ளது.

தலைநகர மக்களின் இத்தகைய மனத் தாங்கல்களை வெளிக்கொணர்ந்து எமது மக்கள்படும் அல்லலை முழுநாட்டிற்கும் தெரியப்படுத்தி எமது பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வுகளை காண்பதற்காகவே எமது சாத்வீகப் பேராட்டம் நடத்தப்படவுள்ளது.

இப்போராட்டத்திற்கு பல்வேறு சகோதர இன அரசியல் [illegible] வித்து வருகின்றனர். இந்நிலையில் தமது சொந்தக் கட்சிக்காரரையே காப்பாற்ற முடியாத சில தமிழ் அரசியல்வாதிகள் இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடுவது பெரும் வேதனைக்குரியது.

எமது போராட்டம் முழுக்க முழுக்க சாத்வீகப் போராட்டமாகும். இதன் மூலம் எமது மன வருத்தங்களை நாம் தெரிவிக்கின்றோம். அடிப்படையில் இது கொழும்பில் சட்டபூர்வமான வர்த்தகத் துறையில் ஈடுபட்டுள்ள அப்பாவி வர்த்தக சமூகத்தின் பிரச்சினையாகும்.

எனவே கொழும்பில் வாழும் அனைத்து வர்த்தகர்களும் தங்களது வர்த்தக நிறுவனங்களை எதிர்வரும் 19 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை முழுமையாக மூடி தமது மன உணர்வுகளை வெளிப்படுத்த வேண்டும்.

புடைவை, இரும்பு,உணவு,நகை உள்ளடங்கலாக அனைத்துத் துறைகளையும் சார்ந்த வர்த்தகர்கள் எமது போராட்டத்திற்கு முழுமையான பங்களிப்பை நல்கிட வேண்டும் [illegible] கோரியுள்ளார். (ச-5)

## இளம் குடும்பஸ்தர் சுட்டுக் கொலை

மட்டக்களப்பு வாழைச்சேனைப்பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கறுவாக்கேணிப் பகுதியில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் அடையாளம் தெரியாத நபர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு 10.35 மணியளவில் நடைபெற்றுள்ளது. கொல்லப்பட்டவர் இரண்டு பிள்ளைகளின் தந்தையான நிறைஞ்சன் வசந்தராஜா (வயது-28) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

மின்சார சபை ஊழியராகக் கடந்த 10 வருடங்களாக ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றி வந்தவர் இவர்.

அண்ணாவீதியிலுள்ள இவரது வீட்டிற்குச் சென்ற ஐந்து நபர்கள் இவர் பெயரை கூறி அழைத்து வெளியே வந்தபோது சுட்டுவிட்டுத் தப்பிச் சென்றதாக் நேரில் கண்ட அப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

கொல்லப்பட்டவரின் சடலம் மேலதிக விசாரணைக்காக வாழைச்சேனை மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையைச் சொல்வதுதான் உலகிலேயே மிகப் பெரிய நகைச்சுவை.

—பெர்னார்ட்ஷா

வலம்புரி

# பெற்றோல் தட்டுப்பாடு எப்போது நீங்கும்?

யாழ்.குடாநாட்டில் உணவுப்பொருள் மற்றும் எரிபொருளுக்கான தட்டுப்பாடு நாளுக்கு நாள் அதிகரித்த வ்ண்ணம் உள்ளது.

அதிலும் பெற்றோல் தட்டுப்பாடு பெரும்பாடாகி விட்டது. பெற்றோல் முடிந்து விட்டது என்ற வாசகப் பலகை எரிபொருள் நிலையங்களில் தொங்க விட்டு பல நாட்களாகிவிட்டன.

அதேநேரம் எரிபொருள் விநியோகத்துக் கென பிரதேச செயலகங்கள் மூலம் அட்டைகள் வழங்கப் பட்டும் பல நாட்களாகிவிட்டன.

இருந்தும் பெற்றோல் வழங்கப்படுவதாக இல்லை. மூன்று, நான்கு நாட்கள் சொந்த அலுவல்களையும் புறந்தள்ளி விட்டு பெற்றோலுக்கான அனுமதி அட்டை பெறுவதில் காலம் கழித்ததே தவிர பெற்றோல் கிடைக்கவில்லை.

அட்டைகளைப் பெற்று வைத்துள்ளவர்களுக்கு எப்போது பெற்றோல் வழங்கப்படும் என்பதை செயலகமோ அன்றிப் பிரதேச செயலகங்களோ அறிவித்தாகவேண்டும்.

வீதியோரங்களில்-கறுப்புச் சந்தைகளில் நானூறு ரூபா, ஐந்நூறு ரூபா எனப் பெற்றோல் பகிரங்கமாக விற்பனை செய்யப்படும்போது கால் வலிக்கக் காத்திருந்து பெற்றோலுக்கானஅட்டை எடுத்தவர்களுக்கு இதுவரை பெற்றோல் வழங்கப் படாமைக்கான காரணம் என்ன? என்பது தெளிவுபடுத்தப்படுவது அவசியம்.

அதேநேரம் ஒரு விடயத்தை நடைமுறைப்படுத்துவதாயின் அதுபற்றி மிக ஆழமாகச் சிந்தித்த பின்னரே அதனை அமுல்படுத்தியாக வேண்டும்.

அதைவிடுத்து எடுத்த எடுப்பில் திட்டங்களை நடைமுறைப்படுத்த முற்பட்டு போட்டுடைக்கும் வேலையில் இறங்குவது திறமையான முகாமைத்துவத்திற்கு அழகல்ல.

அதாவது பொதுமக்கள் பெற்றோலைப் பொறுவதெற்கென வழங்கப்பட்ட அட்டையை நடைமுறைப்படுத்துவதில் குடை, கொடி, ஆலவட்டம் சகிதம் பெருவிழா நடத்திய பிரதேச செயலக்ர்கள் ஒரு கணம் தமது வாசலில் கால் கடுக்கக் காத்திருந்தவர்களை-அவர்கள் அலைந்து திரிந்த கோலத்தைத் திருப்பிப் பார்க்க வேண்டும்.

தமது பிரதேச செயலகத்தில் வைத்து தமது பிரிவுக்குட்பட்ட மக்களுக்கு வழங்கிய அட்டைக்குப் பெற்றோல் கிடைக்க வழிசெய்வது பிரதேச செயலர்களின் கடமையாகும்.

இதனைச் செய்ய தவறுவார்களேயாயின் பின்னாளில் வேறு திட்டங்களை நடைமுறைப் படுத்த முற்படும் போது அவற்றைப் பொதுமக்கள் கேலி செய்வர்.

'பெற்றோல் அட்டை மாதிரித்தான் இதுவுமோ' எனப் பிரதேச செயலர்களின் காதுகளில் கேட்கக் கூடியதான சொற்பிரயோகங்கள் பொது மக்களிடம் இருந்து வரும்.

எனவே பிரதேச செயலர்கள் தமது செயற்பாட்டினை அர்த்தபுஷ்டியுள்ளதாக மாற்ற வேண்டும். தனித்து சொல்வதைச் செய்யும் நிர்வாக முறைமையோ திருப்பிக் கதைப்பது பதவி உயர்வுக்கு இழுக்கு என்ற நினைப்போ மக்களின் அடிப்படைத் தேவைகளையன்றி, பிரதேச செயலகங்களின் நோக்கங்களை நிறைவடையச் செய்யாதென்பது நினைவில் கொள்ளப்பட வேண்டும்.

# குடும்பத்தினரின் செய்தியைப் பெற கீழ்வருவோருக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினூடாக குடும்பங்களிடையே தகவல் தொடர்பை ஏற்படுத்தும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அதன் அடிப்படையில் பின்வருவோரை இலக்கம் 120 கோவில் வீதியில் அமைந்துள்ள செஞ்சிலுவைச் சங்கக் காரியாலயத்திற்கு காலை 9 மணிக்கும் மாலை 4 மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில் சமுகமளித்து குடும்பத் தொடர்பு சம்பந்தமான செய்தியைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

தனபாலசிங்கம் கேதீஸ்( பாலசிங்கம் விடுதி, யாழ்.பல்கலைக்கழகம்), சிவஞானம் சசிக்குமார் (பாலசிங்கம் விடுதி, யாழ்.பல்கலைக்கழகம்), கந்தசாமி மயூரதன் (3 ஆம் வருட கலைப்பீட மாணவன், யாழ்.பல்கலைக்கழகம்), சிவலிங்கம் சிவறூபன்(2 ஆம் வருட முகாமைத்துவ மாணவன், யாழ்.பல்கலைக்கழகம்), குமாரசாமி பாலசுப்பிரமணியம், பாலசுப்பிரமணியம் கேமறஞ்சினி, பாலசுப்பிரமணியம் மன்சுதன்(மே/பா.செல்வி நதீபா, கோணாவளை ஒழுங்கை, திருநெல்வேலி),

செல்வநாயகம் வனஜா(ஆனந்தகுமாரசாமி விடுதி, யாழ்.பல்கலைக்கழகம்), சபாபதி செல்லம்மா(பனிப்புலம் அம்மன் சிலையடி, பண்டத்தரிப்பு), தினேஸ் தயாளினி(அராலி தெற்கு, செட்டியார் மடம் சந்தி, துரைசிங்கம் பத்மாவதி(கிளி)(சோமசுந்தரப்புலவர் ஒழுங்கை, நவாலி வடக்கு, மானிப்பாய்), சின்னத்தம்பி சின்னப்பு(5,றக்கா வீதி, யாழ்ப்பாணம்,

இராசரட்ணம் கேமலதா(2 ஆம் வருட மருத்துவபீட மாணவி, யாழ்.பல்கலைக்கழகம்), சூசைப்பிள்ளை செல்வராசா(ஆச்சிரமம், கரையூர், யாழ்ப்பாணம்), குலசிங்கம்(211/3, கோவில் வீதி, யாழ்ப்பாணம்), அருள்தாஸ் யூடிற் (நெடுங்குளம், கொழும்புத்துறை,யாழ்ப்பாணம்), சந்திரியார் கிருபாகரன்(அம்மன் கோவில், கொக்குவில் மேற்கு),

குணசிங்கம் குணசீலன்(2 ஆம் வருட கலைப்பீட யாழ் பல்கலைக்கழக மாணவன், கல்வியங்காட்டுச் சந்தி, யாழ்ப்பாணம்), பசுபதி நவரட்ணம்(45, பாரதி வீதி, நல்லூர் வீதி முன்பாக, நல்லூர் அல்லது கச்சாய்தெற்கு, கொடிகாமம்), கோபாலசிங்கம் பாஸ்கரன்(நதுமி கூல்பார், யாழ்.நகர்),மோகனதாஸ் செல்வறோகினி(அரியாலை, யாழ்ப்பாணம்),சண்முகரட்ணம் சந்திரகுமாரி மே/பா.இ.செந்தில்குமார்(இந்திரன்)(கோவில் வீதி, யாழ்ப்பாணம்),

வேலுப்பிள்ளை அருளம்பலம், அருளம்பலம் கெங்காதரன் (நோயாளர் யாழ்.பொது மருத்துவமனை, யாழ்ப்பாணம்), அல்பிரட் கெமிலஸ்பெல்ஸான் (3 ஆம் வருட மருதனார் மடம் கவின்கலைக் கல்விக் கல்லூரி மாணவன் அல்லது கோவில் வீதி, யாழ்ப்பாணம்), நவரட்ணம் நந்தினி(யாழ்ப்பாணம்),

கார்த்திகேசு குணசிங்கம்( மே/பா. கே.மார்க்கண்டு 40, அரசடி வீதி, நல்லூர்), தவநாயகம் பிரசாந்தி (மே/பா.வி.பாலசிங்கம், திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்),நடராஜா ஜெனனன்(2 ஆம் வருட முகாமைத்துவ மாணவன், பாலசிங்கம் விடுதி, யாழ்.பல்கலைக்கழகம்), விவேகானந்தம் துசியன்(பாலசிங்கம் விடுதி, யாழ்.பல்கலைக்கழகம்) (ச)

# மகாபொல கொடுப்பனவை வழங்குமாறு யாழ்.பல்கலைக்கழக மாணவர் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக மாணவர்களுக்கான மகாபொல புலமைப்பரிசில் நிதி இந்த ஆண்டுக்கு இதுவரை வழங்கப் படவில்லை என மாணவர்கள் கவலை தெரிவித்தனர். இந்த ஆண்டு தொடக்கத்தில் வழங்கப்பட வேண்டிய குறிப்பிட்ட முதலாம் தவணைக்கான நிதிகூட வழங்கப்படாது காணப் படுகின்றது.

குறிப்பிட்ட மாணவர்களுக்கு வழங்குவதற்கென வேண்டிய நிதி பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக் குழுவினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளபோதும் இந்த நிதியை உரியவர்கள் கொடுக்காது இழுத்தடித்து வருவதாக மாணவர்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த காலங்களில் பல தடவைகள் பல்கலைக்கழக நிர்வாகத்துடன் குறிப்பிட்ட நிதியை வழங்கும்படி மாணவ மன்றங்கள் கோரிக்கை விடுத்து வந்தபோதிலும் காலத்துக்குக் காலம் வழங்குவதாகக் கூறி காலத்தை இழுத்தடித்து இந்த நிதியை வழங்க முன்வரவில்லை என அவர்கள் குற்றஞ்சாட்டினர்.

தற்போது யாழ்.குடாநாட்டில் நிலவும் அசாதாரண நிலைமை காரணமாக யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழகம் இயங்காத போதிலும் தமது வீடுகளுக்குச் செல்ல முடியாது பல ஆயிரக்கணக்கான மாணவர்கள் பெரும் கஷ்டமான நிலையில் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இக் குற்றச்சாட்டுத் தொடர்பாக யாழ்.பல்கலைக்கழக பதில் துணைவேந்தருடன் தொடர்பு கொண்ட போது அவர் பதிலேதும் கூற மறுத்துவிட்டார். (ச-5)

# பாப்பரசர் வருத்தம் தெரிவிப்பு



இஸ்லாம் தொடர்பாக தாம் சமீபத்தில் வெளியிட்ட கருத்துக்கள் இஸ்லாமியர்களுக்கு வருத்தித்தினை ஏற்படுத்தியிருப்பது குறித்து போப் அவர்களின் கவலை தெரிவிக்கும் அறிக்கை ஒன்றினை வத்திக்கான் வெளியிட்டுள்ளது.

தன்னுடைய உரையில் இடம்பெற்ற சில பத்திகளில் இஸ்லாமியத்தினை நம்புவோருக்கு காயம் ஏற்படுத்தியிருப்பது குறித்து போப் பெனடிக் மிகவும் வருத்தம் அடைந்திருப்பதாக வத்திக்கானின் இராஜாங்க விடயங்களுக்கான புதிய செயலாளரான கார்டினல் டார்சிசியோ பெர்டோன் கூறியுள்ளார்.

ஒரே கடவுளை வழிபடும் இஸ்லாமியர்களுக்கு போப் மரியாதையளிப்பதாகவும் ஜேர்மனி நாட்டில் இறையியல் தொடர்பாக அவர் ஆற்றிய உரையில் இடம்பெற்ற விடயங்கள் அவர் கூறிய அர்த்தத்தில் கூறப்படவில்லை என்றும் கூறினார்.

போப் அவர்கள் மன்னிப்புக்கோர வேண்டும் என்று துருக்கி, பாகிஸ்தான், எகிப்து, லெபனான் மற்றும் மலேசியா நாடுகளில் இருக்கும் தலைவர்கள் மற்றும் மத போதகர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஆனால் போப் பிறந்த ஜேர்மனி நாட்டின் சான்சிலா ஏஞ்சலா மெர்கெல் போப் பாண்டவருக்கு ஆதரவாக கருத்து வெளியிட்டு போப் பாண்டவரின் கருத்துக்கள் தவறுதலாக புரிந்து கொள்ளப்பட்டுள்ளதாகக் கூறினார். (ச-5)

# நிவாரணப் பணிகள் தொடர்பாக கிழக்கில் உயர் மட்ட ஆலோசனை

(மட்டக்களப்பு)

இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் தொடரும் யுத்த அனர்த்த காரணமாக தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறி தற்போது மட்டக்களப்பு மாவட்டத்தில் தங்கியிருக்கும் அகதிகளுக்கான நிவாரணப் பணிகள் தொடர்பாகவும் அந்தப் பணிகளை முன்னெடுப்பதில் அரச மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும் நேற்று அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சர் அமீர் அலி பல்வேறு தரப்பினருடனும் கூடி ஆராய்ந்துள்ளார்.

மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற இது தொடர்பான உயர் மட்ட[illegible] மற்றும் [illegible]தொண்டர் அமைப்புக்களின் பிரதிநிதிகள் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் படை மற்றும் சிவில் அதிகாரிகள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

இம் மாவட்டத்தில் மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்டங்களைச் சேர்ந்த 15 ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் தற்போது தற்காலிகமான இடங்களில் தங்கியுள்ள போதிலும் குறிப்பாக விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுக் குட்பட்ட வாகரைப் பிரதேசத்தில் சுமார் 10 ஆயிரம் குடும்பங்களுக்கு அடிப்படை வசதிகளைஏற்படுத்திக் கொடுப்பதிலும் நிவாரண உதவிகளை வழங்குவதிலும் அரச மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்தும் முக்கிய கவனம் செலுத்தப்பட்டது. (ச-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்திரிகா தலைமையில் புதிய அரசியல் கட்சி

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்கவின் தலைமையில் புதிய கட்சி ஒன்று அமைக்கப்படவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

தற்சமயம் லண்டனில் தங்கியுள்ள சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க விரைவில் இலங்கை வரவுள்ளார்.

இந் நிலையில் அவரின் தலைமையில் ஶ்ரீலங்கா சுதந்திர கட்சியின் பண்டாரநாயக்க குழு என்ற பெயரில் அரசியல் கட்சி ஒன்றை நிறுவ முடிவெடுக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

சந்திரிகாவின் இந்த முயற்சிக்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் 20 பேரும் மூன்று முதலமைச்சர்களும் ஆதரவு தெரிவித்துள்ளதாக இணையத்தளம் ஒன்று குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை இந்த செய்தியை அமைச்சர் அநுரா பண்டாரநாயக்க மறுத்துள்ளார். ஶ்ரீலங்கா சுதந்திரக்கட்சியானது தமது தந்தையாராலும் தாயாராலும் அமைக்கப்பட்டு வளர்க்கப்பட்டது.

இந் நிலையில் அதனை பிரிப்பதற்கு தாம் எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்போவதில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார். முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க விரைவில் நாடு திரும்பியதும் அவருக்கான உரிய பாதுகாப்புகள் வழங்கப்படவேண்டும்.

இதனை தவிர்த்து அதன் மூலம் அவருக்கு பாதுகாப்பு அச்சுறுத்தல் எவையும் ஏற்படுமானால் அதற்கு ஶ்ரீலங்கா சுதந்திர கட்சியின் அனைத்து உறுப்பினர்களும் பொறுப்பேற்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ச-5)

# ஐ.நா.சபைப் போட்டியிலிருந்து ஜயந்த தனபால விலகும் வாய்ப்பு

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் தலைமைப் பதவிக்கான போட்டியில் குதித்துள்ள அங்கத்தவர்கள் மீதான நம்பிக்கை வாக்கெடுப்பின் இரண்டாவது வாக்குப்பதிவு கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

தற்போது போட்டியிடும் ஐந்து பிரதிநிதிகளின் பெயர்கள் மீதும் இரகசிய வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. ஐ.நா.பாதுகாப்புச் சபையின் 15 அங்கத்துவ நாடுகளின் பிரதிநிதிகளும் வாக்களிப்பில் பங்கேற்றனர்.

ஒவ்வொரு நாட்டின் பிரதிநிதியும் இந்த ஐந்து வேட்பாளர்கள் பெயர் மீது வாக்களிக்க வேண்டும். இந்தப் பதவிக்கு இந்நபர் வேண்டும்; வேண்டாம் அல்லது கருத்தில்லை என்ற ஒன்றை இவர்கள் தெரிவு செய்ய வாய்ப்புள்ளது.

இதன் அடிப்படையில் 14 விருப்பு வாக்குகளை தென்கொரிய வெளிநாட்டமைச்சரும் ஐ.நா.தலைமைப் பதவிக்கான போட்டியாளருமான பன் கி-மூன் பெற்று முதலிடத்தில் உள்ளார்.

இந்தியாவின் பிரதிநிதியான சஷி தரூர் மற்றும் தாய்லாந்தின் பிரதி பிரதம மந்திரியான சுரக்கியத் சத்திராத்தய ஆகியோர் இரண்டாம் இடத்திலுள்ளனர்.

மிக அதிக வாக்குகளைப் பெறுவார் என பரவலாக எதிர்பார்க்கப்பட்ட யோர்தானின் ஐ.நா.தூதுவரான இளவரசர் செய்யத் ராத் செய்யத் அல்-குசைன் ஆறு விருப்பு வாக்குகளை மட்டுமே பெற்றார்.

சிறிலங்கா பிரதிநிதியான ஜயந்த தனபால மொத்தம் மூன்று விருப்பு வாக்குகளை மட்டும் பெற்று இறுதி இடத்தில் உள்ளார். இறுதி இடத்திலுள்ள ஜயந்த தனபால ஐ.நா. தலைமை பதவிக்கான போட்டியிலிருந்து விலகுவது உறுதி என ஐ.நா.பிரதிநிதியொருவர் கருத்து வெளியிட்டுள்ளார். (ச-5)


## JAFFNA COLLEGE,VADDUKODDAI ADMISSION-2007

1. பின்வரும் வகுப்புகளில் வெற்றிடங்கள் உள்ளன.

**தரம் 1, தரம் 6**

2. அ) விண்ணப்பப் படிவங்களை 08.09.2006 முதல் 14.10.2006 வரை பெற்றுக்கொள்ளலாம்.
   ஆ) எக்காரணம் கொண்டும் 14.10.2006 இற்குப் பின்னர் விண்ணப்பப் படிவங்கள் விநியோகிக்கப்படமாட்டா.
   இ) எமது விண்ணப்பப்படிவங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.
   ஈ) விண்ணப்பப்படிவங்கள் ஏற்கப்படும் இறுதிநாள் 18.10.2006 அத்திகதிக்குப் பின்னர் எமக்குக்கிடைக்கும் விண்ணப்பங்கள். கவனத்தில் எடுக்கப்படமாட்டா.
3. பிழையாக நிரப்பப்பட்டவையும் , பூரணமாக நிரப்பப்படாதவையுமான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படலாம்.
4. தரம் ஒன்றுக்கான விண்ணப்பப் படிவங்களுடன் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தின் பிரதி (போட்டோஸ்ரட் கொப்பி) இணைக்கப்படவேண்டும்.
5. விண்ணப்பப் படிவங்களை ஞாயிறும், விடுமுறையும் தவிர்ந்த ஏனைய நாள்களில் காலை 9 மணிமுதல் பிற்பகல் 2 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.
6. வயதெல்லைகள்:
   அ) தரம் 1 விண்ணப்பதாரி 01.02.2001 இற்கும் 31.01.2002 இற்கும் இடையில் பிறந்திருத்தல் வேண்டும்.
   ஆ) தரம் 6 விண்ணப்பதாரி 01.02.1996 இல் அல்லது அதற்குப் பின்னர் பிறந்திருத்தல் வேண்டும்.
7. ஒரு படிவத்திற்கும் பரீட்சைக்குமான கட்டணம் ரூபா 500
8. பிரவேசப் பரீட்சை / நேர்முகப் பரீட்சை:
   04.11.2006 காலை 9 மணிக்கு பரீட்சை ஆரம்பமாகும்.
9. மிகச் சிறந்த கல்விப் பெறுபேறுகளை உடைய மாணவர்-மாணவிகளுக்கு அனைத்து வசதி வாய்ப்புகளுடனும் கூடிய விடுதி, நூலகப்பாவனை மற்றும் சிறந்த புலமைப்பரிசில்கள் எம்மால் வழங்கப்படும்.

-அதிபர்.

(C-446)


# தமிழர்கள் கடத்தப்படுவதை தடுக்க விசேட பொலிஸ் குழு அமைப்பு

கொழும்பில் தமிழ் வர்த்தகர்கள் மற்றும் பொதுமக்கள் கடத்தப்பட்டுவரும் சம்பவங்களை தடுக்கும் வகையில் விசேட பொலிஸ் குழுவொன்று சிரேஷ்ட பிரதிப்பொலிஸ் மா அதிபர் இலங்கோன் தலைமையில் நியமிக்கப்பட்டுள்ளது.

கொழும்பிலும் அதன் புறநகர் பகுதிகளிலும் தமிழ் வர்த்தகர்கள் உட்பட பலர் தொடர்ச்சியாக கடத்தப்பட்டு பின் விடுவிக்கப்படுவதுமான சம்பவங்கள் அண்மைக்காலமாக அதிகரித்து வருகின்றன.

இந்த கடத்தல் சம்பவங்கள் குறித்து பொலிஸ் தலைமையகம் அதிருப்தி அடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (ச-5)

# வவுனியாவில் கைக்குண்டு வீச்சு

வவுனியா குருமன்காடு பிரதேசத்தின் இராணுவ காவலரண் மீது இனம் தெரியாதோரால் கைக்குண்டு வீசப்பட்டுள்ளது.

இதன்போது இராணுவச் சிப்பாய் கொல்லப்பட்டதோடு மேலும் இரு படைச் சிப்பாயினர் காயமடைந்துள்ளனர். கைக்குண்டு வீச்சு நேற்று முன்தினமிரவு இடம் பெற்றுள்ளது. (ச)

# சங்கக்கிளை இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

திருட்டு மற்றும் பாதுகாப்புக் காரணங்களுக்காக நீராவியடியில் இயங்கிவந்த பலநோக்குக்கூட்டுறவுச் சங்கத்தின் 16 ஆம் கிளை யாழ்.கூட்டுறவுச் சங்கக்கட்டடத் தொகுதிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

அதேபோன்று ஸ்டேசன் வீதியில் இயங்கி வந்த 28 ஆம் கிளையும் கூட்டுறவுச் சங்க கட்டடத்தொகுதிக்கு மாற்றப்பட்டுள்ளது.(ச-133)

# வவுணதீவிலிருந்து ஷெல் தாக்குதல்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வவுணதீவு இராணுவ முகாமிலிருந்து விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதி மீது இராணுவத்தினரால் எறிகணைத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதனையடுத்து விடுதலைப்புலிகளும் பதில் தாக்குதல் நடாத்தியதாக தெரிவிக்கப்பட்டது. இராணுவத்தினரின் ஷெல் தாக்குதலினால் குருக்கன்முனை, பருத்திமுனை, காயாமடு, புளியடிமடு ஆகிய இடங்களில் எறிகணைகள் வீழ்ந்து வெடித்துள்ளன.

அங்கிருந்து மக்கள் அச்சம் காரணமாக இடம் பெயர்ந்து வருவதாக தெரிவிக்கப்பட்டது. (ச)

# கடந்த மாதம் மட்டும் 16 முறை பாரிய தேடுதல்

(கொழும்பு)

கொழும்பில் கடந்த மாதம் 16 பாரிய சுற்றிவளைப்புத் தேடுதல்கள் மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இந் நடவடிக்கையின்போது 761 பேர் கைதுசெய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

இவர்களில் 131பேர் மேலதிக விசாரணைக்காக தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இத் தேடுதலில் பெரும்பாலானவை பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

வீடுகள், விடுதிகள் ,கடைகள் மற்றும் பொது இடங்களிலுமே தேடுதல் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

3 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வாகனங்களும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனவாகவும் தெரியவருகிறது. (ச)

## மனித உரிமை...

பெர்னாண்டோ இது குறித்து தகவல் தருகையில், கொழும்பில் தமிழர்களுக்கு எதிரான சம்பவங்கள் அதிகரித்து வருகின்றமை கவலைக்குரியதாகும்.

இதனால் தலைநகர் கொழும்பில் வாழும் தமிழர்கள் பெரும் அச்சத்துடன் உள்ளனர். இதனால் பாரியவிளைவுகள் ஏற்படும் எனத் தெரிவித்தார். (ச)

## கடல் வழிப்...

விடுதலைப்புலிகள் தெரிவித்து வருகின்றனர்.

அரசு தனது படை நலனில் அக்கறை கொண்டு மக்களை கேடயமாகப் பயன்படுத்தி கடல்வழி படைப்போக்குவரத்தை மேற்கொண்டு வருகிறது.

மக்களுடைய பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு கடல்வழிப்போக்குவரத்து எதனையும் மேற்கொள்ளவேண்டாமென்று அரசியல் துறை வேண்டுகோள் விடுக்கின்றது எனக் கூறப்பட்டுள்ளது. (ச-5)

# மா விநியோகம்

(யாழ்ப்பாணம்)

பங்கீட்டு அட்டைக்கு கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக நேற்று முதல் மா வழங்கப்படுகிறது.

1-2 அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பத்தினருக்கு 2 கிலோவும் 3 அங்கத்தவர்களுக்கு மேற்பட்ட குடும்பங்களுக்கு 3 கிலோ மாவும் வழங்கப்படுகிறது. (ச-133)

## மன்மோகன்...

பிரதமர் மன்மோகன் சிங் அணி சேரா நாடுகள் அமைப்பின் மாநாட்டிற்கு உத்வேகம், புத்துயிர் கொடுக்க வேண்டுமானால் உலகத்தில் தீவிரவாதம் நோய் ஒழிப்பு சக்தித்துறை பாதுகாப்பு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு போன்ற உடனடியாக கவனிக்கப்பட வேண்டிய விடயங்களுக்கு சர்வதேச ரீதியில் எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகளுக்கு அணி சேரா நாடுகளின் அமைப்பின் முடிபு மையமாக இருக்க வேண்டும் என்றார்.

அத்தோடு ஒரு அமைப்பாக தாங்கள் பயங்கரவாத எண்ணங்களை எப்போதுமே நிராகரித்திருப்பதாகவும் கூறினார். (ச-5)

## சமாதான முயற்சிகளை...

இலங்கையில் அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான சமாதானப்பேச்சுக்களுக்கு தான் தேவையான ஒத்துழைப்பு வழங்கத் தயாராக இருப்பதாகவும் கொபி அனான் தெரிவித்துள்ளார்.

இதேவேளை தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எதிராக யுத்தம் எதனையும் ஆரம்பிக்கவில்லை என மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகள் மீது [illegible]தில் தாக்குதல்கள் மட்டும் மேற்கொள்ள[illegible]டு வருகின்றது. விடுதலைப்புலிகளின் தாக்குதல் காரணமாக பெருமளவு படையினர் காயமடைந்துள்ளனர். பலர் கொல்லப்பட்டுள்ளனர் என ஐ.நா. செயலாளருக்கு ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்றிரவு இந்தியப்பிரதமர் மன்மோகன் சிங்கை சந்தித்துள்ளார்.

இதன்போது இலங்கையின் தற்போதைய சூழ்நிலை ,மோதல்கள் உட்பட இரு தரப்பு விடயங்கள் குறித்தும் பேசப்பட்டுள்ளது. (ச-5)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்[illegible] றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.09.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org